Registered as a News Paper பக்கங்கள்: 06 விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 01 (15-01-1992) புதன்கிழமை ஓசை: 331

## தமிழகச் சிறையில் பத்து புலிகள் உண்ணாவிரதம்

தம்மைத் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் அனுமதிக்கக்கோரி தமிழ்நாட்டில் 10 விடுதலைப் புலிகள்உண்ணாவிரதமிருந்துவருகின்றனர். தமிழ்நாடுநங்குநேரி உபசிறையிலுள்ளவிசேட முகாம்ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் அங்கவீனர்களாவர். மருத்துவ சிகிச்சைக்காகத் தி.மு.க எம்.பி. வை கோபாலசாமி வீட்டில் தங்கியிருந்தபோது கடந்த நவம்பர் மாதம் இவர்கள் (5 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் துணிகர தாக்குதல்கள்; சிறிலங்கா கடற்படையினர் பதற்றம்

### பாதுகாப்பை ஆராய விசேட குழு

(கொழும்பு)

சமீபகாலமாக வடபிராந்திய கடற்பரப்பிலும், கரையோர காவல் நிலைகள்மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத்தாக்குதல்கள் காரணமாக சிறிலங்கா கடற்படைத் தலைமைப்பீடம் அதிர்ச்சி அடைந்துள்ளது. கடற்படையினரின் உயிரிழப்புக்களைத் தடுக்கவும், போர்க் கப்பல்களின் சேதத்தை தவிர்க்கவும் உடனடியான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கடற்படைத் தலைமையகம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக நிலைமையை ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று வடக்கிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

வடபிரதேசக் கடற்பரப்பில் கடந்த் சில மாதங்களாக அதிகரித்துவரும் விடுதலைப் புலிகளின் துணிகரத்தாக்குதல்கள் சிறிலங்கா கடற்படையினருக்கும் பெரும்சேதத்தை விளைவித்துள்ளவேளை அவர்கள் மத்தியில் பதற்றத்தையும் தோற்றுவித்துள்ளது.

ஆரம்பத்தில் பாரிய கடற்படைக் கப்பல்கள்மீது கரும் புலித் தாக்குதல்களை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் பின்னர் கடற்கண்ணித் தாக்குதல்களைநடத்தினர். இதன் காரணமாக விநியோகங்களும் ரோந்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

இதேவேளை அண்மையில் யாழ். கடல் நீரேரியில் விடுத (5 ஆம் பக்கம் பார்க்க)




## மீனவரை விடுவிக்கக் கோரி யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

### சர்வதேச செஞ்சிலுவையிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடலில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 18 மீனவரை மீட்டுத் தருமாறு கோரி நூற்றுக்கணக்கானயாழ். கரையோரப்பகுதி மீனவர்களும் பாடசாலை மாணவர்களும் இணைந்து நேற்று யாழ்.நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

பலசுலோகங்களையும் தாங்கியவாறு குருநகர், நாவாந்துறை, கொழும்புத்துறை, பாஷையூர், கொட்டடி பகுதிகளிலுள்ள மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் உட்பட பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்ட மேற்படி ஊர்வலம் குருநகர்சந்தியிலிருந்து ஆரம்பமாகி யாழ். கோவில்வீதி வழி (5 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலை-மூளாய்

## குடியிருப்பு மீது தாக்குதல்; நிறுத்தக்கோரி மகஜர்

மூளாய், பொன்னாலைப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா அரசபடையால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களை உடனடியாக நிறுத்தக்கோரி நூற்றுக்கணக்கான மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று நேற்று யாழ்.செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்விற்கு நிதி; உதவி வழங்குவோர் மறுப்பு

கொழும்பில் சென்றவாரம் நடைபெற்ற உதவும் நாடுகள் கூட்டத்தில் புனர்வாழ்வுச் செலவுக்குச் சிறிலங்கா பணம் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிகமாகப் புனர்வாழ்வுக்கு அரசு செலவு செய்வதன் அழுத்தம் வரவு - செலவுத் திட்டத்தைப் பாதிக்கின்றது என்று சிறிலங்காக் குழுவின் தலைவர் ஆர். பாஸ்கரலிங்கம் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தார். அகதிகளுக்கு உணவு வழங்கவும் அவர்களைப் பராமரிக்கவும் மொத்தம் 300 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக சிறிலங்கா தரப்பில் வலியுறுத்தப்பட்டது. ஜனவரி 22 இல் இந்தியாவிலிருந்து அகதிகள் நாடு திரும்பியதும் இந்தச் செலவீனம் மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கிலும் கிழக்கிலும் நிலைமை வழமைக்குத் திரும்பினால் நிதி உதவியை வழங் (5 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மிதிவெடியில் சிக்கி 4 இராணுவம் கால் இழப்பு

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் மிதிவெடிக்கு நான்கு சிறிலங்கா இராணுவ சிப்பாய்கள் தங்கள் கால் (5 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை. சுற்றிவளைப்பு; துப்பாக்கிச்சூடு; தீவைப்பு

திருக்கோணமலைமாவட்டம் மூதூர் பகுதியில்கடந்த இரண்டு வாரங்களாகதமிழ் கிராமங்கள் இராணுவச் சுற்றிவளைப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது

துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும், தீயிடல்களும் இடம் பெற்றுள்ளன. அங்கிருந்து தமிழ் மக்கள் பெருமளவில் வெளியேறிவருகின்றனர். இதனை அடுத்து அக்கிராமங்களில் பல இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(5ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத்தில் 2000 பேர் கைது

## பொலிஸ் வேட்டை தீவிரம்

(பதுளை)

எல்ல-இந்துகல தோட்ட கொள்ளை தொடர்பாக அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது. கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் சுமார் 2000பேர் சிறிலங்காபொலிசாரினால் தீவிரமாக விசாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அப்பகுதியைச் சேர்ந்த மேலும் பலர்தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

தோட்டத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா பொலிசார் பல தடை முகாம்களை நிறுவி சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், பிரதான வீதிகளில் தடைமுகாம்கள் அமைக்கப்பட்டு வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

அண்மையில் நடைபெற்ற கைதுகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்களும், முன்னர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் உறவினர், நண்பர்களும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற (5 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### பரந்தாமன், சுகுணன்

முல்லைத்தீவு மாவட்டம் முத்தையன்கட்டு குளத்தில் ஏற்பட்ட படகு விபத்தில் இருபோராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். வீரச்சாவை தழுவிக்கொண்ட (5 ஆம் பக்கம் பார்க்க)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் நாட்டில்

மேல்மட்ட தமிழர்களின் நெறி (சமய) வாழ்வில் பிராமணருக்கு இருந்த பிடிக்கு திராவிட இயக்கத்தின் நாத்திகக் கொள்கையும் சமய சார்பற்ற கொள்கையும் அச்சுறுத்தலாக இருந்து வந்துள்ளது.

வட இந்தியாவில் இந்துமத வெறிகொண்ட பாரதீய ஜனதாக்கட்சி எழுச்சிபெற்றபோது தமிழ்நாட்டிலுள்ள பிராமணர்கள் சுறுசுறுப்படைந்தனர். பிராமண வகுப்பைச் சேர்ந்த செல்வி ஜெயலலிதாவின் வெற்றி தமிழ் நாட்டு அரசியலில் தங்கள் செல்வாக்கைச் செலுத்த அங்குள்ள பிராமணர்களுக்கு வழிவகுத்தது. வேதாகமத்தைக் கற்பிப்பதற்கு செல்வி ஜெயலலிதா கல்லூரியை நிறுவியதுடன் இந்துக் கோவில்களுக்கு நிதி திரட்டியும், இந்துசமய விவகாரங்களுக்கு ஒரு அதிகார சபையையும் உருவாக்கியுள்ளார். இந்து சமய விழாவான கிருஷ்ண ஜயந்தி பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது இவ்விழாவுக்குச் சிறப்புக் கொடுக்குமுகமாக தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு சிறப்புச்செய்தியை வெளியிட்ட திராவிடஇயக்கத்தைச் சேர்ந்த முதலாவது முதலமைச்சர் இவரேயாவார்.

தமிழ் மாநிலத்தின் பலவிடயங்களில் செல்வி ஜெயலலிதாவுக்குப் புத்திமதி வழங்குபவரும் முன்னாள் நடிகருமான (சோ) இராமசாமி தனது 'துக்ளக்' பத்திரிகையில் திராவிடக் கொள்கைக்குஎதிராகத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். எங்கே பிராமணன் என்ற தனது நூலில் வேதங்களின் மகிமை பற்றியும் மனுநீதியின் மகத்துவம் பற்றியும்இவர்தொடர் வரிசையாக எழுதி வருகின்றார். சமஸ்கிருதம்ஒருதனித்துவமான மொழி என்றும், அதனது சேர்க்கையும் செல்வாக்குமே தமிழ் மொழி ஒரு மொழியாக உருவாவதற்கு உதவியது என்றும் பிராமணர் ஒருவருக்குச் சொந்தமான தினமணி என்னும்பத்திரிகைஎழுதியுள்ளது. தங்களதுபுராதன இலக்கணம் என்று தமிழர்களால் கருதப்படும் தொல்காப்பியம் என்னும் நூலும் சமஸ்கிருத நூலை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டதாக இப்பத்திரிகை கூறுகின்றது. பிராமணரின் ஆரிய பண்பாட்டைத் தமிழ் நாட்டிலிருந்து விரட்டிவிட்டோம் என்று நினைத்த பலருக்கு இச்செய்தி அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்தச் சந்தர்ப்பத்தை ஜெயலலிதாவைக் கண்டிப்பதற்குத் தனக்கொருவாய்ப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் கருதியது. ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்குமிடையே போர் ஆரம்பித்துவிட்டது. திராவிட பாரம்பரியத்தையும், தமிழ் மொழியையும் காப்பாற்ற ஆயிரம் சிங்கங்களின் பலத்துடன்தான் போராடப் போவதாகத் திரு. கருணாநிதி கூறியுள்ளார்.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992.02 28 வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்
2. நோயியல் பேராசிரியர்
3. மருத்துவப் பேராசிரியர்
4. மனநோயியல் பேராசிரியர்
5. குழந்தை மருத்துவப் பேராசிரியர்
6. அங்கக்கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு
7. கழலையியல் அறக்கொடைத் தவிசு
8. விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 - உடற்றொழிலியல் / சமூதாய மருத்துவம் / சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / நோயியல் மருந்தியல் / மருத்துவம் / மகட்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / மனநோய் மருத்துவம் / அறுவை மருத்துவம்.
9. தற்காலிக விரிவுரையாளர் - உடற்றொழிலியல் / சமூதாய மருத்துவம் / சட்டமருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / நோயியல் / மருந்தியல் / மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / மனநோய்மருத்துவம் / அறுவை மருத்துவம்.
10. கிளினிக்குக்குரிய உளநோய் வல்லுநர்,

**சம்பள அளவுத் திட்டம்:**

பேராசிரியர் தரம் 11: ரூபா 12,200-6x300-14,000/- மாதமொன்றுக்கு,

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா 8,000 - 5x250 - 9,250/- மாதமொன்றுக்கு.

விரிவுரையாளர் (மருத்துவம்) : ரூபா 4,500 - 10x200 - 6,500/- மாதமொன்றுக்கு.

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்குமுதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படி அதிகமாக வழங்கப்படல் வேண்டும் அதாவது 4,900/- சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) : ரூபா 4,900/- மாதமொன்றுக்கு.

கிளினிக்குக்குரிய உளநோய் வல்லுநர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்கு.

(ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500 - 10x200 - 6,500/- மாதமொன்றுக்கு சம்பள அளவுத்திட்டத்தில் 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.
3. அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல்வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின்சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: பேராசிரியர்கள், அறக் கொடைத் தவிசுகள் ஆகிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-10.

(சி/3780)

---

## சிரமதானம்

நாயன்மார்கட்டு சனசமூ நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதானநிகழ்ச்சி கடந்த 10.01.92 அன்று இடம் பெற்றது. சுற்றாடல், சுகாதாரம் பற்றிய மாநகர சபையினரின் அறிவுறுத்தலுக்கிணங்க நடைபெற்ற இச்சிரமதானத்தில் பெருந்தொகையானோர் பங்குபற்றினர்.

## வரி விளம்பரம்

**ரூபா 1000 பரிசு**

''நொடியும் விடையும்'' - விடுகதைத் தொகுப்பின் மூன்று பாகங்களும் இப்போது மீண்டும் கிடைக்கின்றன. பரிசு ஆயிரம் ரூபாவுக்கான போட்டியும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் - ''கோப்பாய் சிவம்''

(2095)

**வைத்தியம்**

எனது ஆஸ்த்மா (தொய்வு-முட்டு) வைத்திய நிலையத்தில் பழைய நோயாளர்களை மட்டும் பார்வையிடுதல், மருந்து கொடுத்தல் ஞாயிற்றுக்கிழமை தவிர காலை 9-12 மணிவரையும் மாலை 4-6 மணிவரையும் நடைபெறும். டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் (ஆஸ்த்மா சிகிச்சை நிபுணர்) 33, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

(2094)

**பயிற்சி வகுப்புக்கள்**

மனையியல் டிப்ளோமா வகுப்புகள் கேக் ஐசிங், சிற்றுண்டிவகை, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், தையல், பூக்கள் செய்தல், வண்ணச் சாயமிடல் மற்றும் கைவேலைகள். பயிற்சிக்காலம்: 3,6 9 மாதங்கள். திருமதி பவளம் சிவசுப்பிரமணியம் ''அனித்தா பாடசாலை' பூநாறி மரத்தடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

[சி/3698]

---

## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப் போல் ஒரு சில நபர்களால் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறிய வந்துள்ளோம். அசல் ஆர். வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனை செய்பவர்களை இனம்கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம். போலி பீடி விற்பனையாளர் பற்றிய

**தகுந்த தகவல் தருபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.**

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**

58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2099)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1992-01-15

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஈச்சந்தீவில் சிறிலங்கா கடற்படையினரின் முற்றுகையின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

- **சுதா** (வி. சுதாகரன் - சேனையூர், மூதூர்)
- **தீபன் / கவிஞன்** (நா. சந்திரசேகரம்- ஆலங்கேணி, கிண்ணியா)
- **வரதன்** (அகிலேசபிள்ளை வரதநாதன் - கடற்கரைச்சேனை, மூதூர்)

கடற் பயணத்தின்போது காணாமல்போன

- **மோகன்** (நாவாந்துறை, யாழ்ப்பாணம்)
- **மைக்கல்** (மைக்கல் லிபோன் - நாவாந்துறை, யாழ்ப்பாணம்)
- **வீரா** (வீரகுமார் - நாவாந்துறை, யாழ்ப்பாணம்)

திருமலை, ஆலங்கேணியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 20 தமிழர்கள்

வாழைச்சேனை, கிண்ணையடியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

மட்டக்களப்பில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுமி

நாவற்குழியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு உப்புப் பாத்திக்குள் சடலமாக மீட்கப்பட்ட 2 தமிழர்கள்

புன்னாலைக்கட்டுவனில் சிறிலங்காப் படைகளின் உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1989ஆம் ஆண்டு சுழிபுரத்தில் இந்தியப்படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**மேஜர் தும்பன் / மகேந்திரன்** (அந்தோனிப்பிள்ளை மரியதுரை - சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு)

1991 ஆம் ஆண்டு வந்தாறுமூலை கடைசி மலையில் சிறிலங்காப் படையினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**ஜெயவந்தான்** (சிதம்பரப்பிள்ளை குணசிங்கம், காரைதீவு, அம்பாறை)

தெல்லிப்பளை - டச்சுவீதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**பாமதி** (சாந்தி யோசப் - முன்னம்போடி வெட்டை தோப்பூர், திருக்கோணமலை)

சிலாவத்தையில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**சந்துரு** மலையப்பன் யோகரட்ணம் - விசுவமடுக் குளத்தடி, முல்லைத்தீவு)

**உக்கினாஸ்/டக்ளஸ்** (சண்முகநாதன் யோகலிங்கம் இரணைமடுச்சந்தி, பாரதிபுரம்)

9ஆம் கட்டையில் பொறி வெடியில் சிக்கியதால் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். ஜனதாஸ்** (சித்தாண்டி, மட்டக்களப்பு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

- மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3779)

## வெள்ளைப் பிரம்பின் தந்தை காலமானார்

கட்புலனற்றவர்களுக்கான வெள்ளைப் பிரம்பை அறிமுகப்படுத்திய பிரான்சு நாட்டுப் பத்திரிகையாளர் ஜீன் டிவேக் தனது 100 - ஆவது வயதில் மொறக்கோவில் காலமானார். இதனைப் பிரான்சு நாட்டு சான்சலேட் கடந்த சனிக்கிழமை மொறக்கோவில் அறிவித்தது.

காபரே பாடகராக ஆரம்பித்த இவர், பின்னதாகப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுப் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

## ஆசிரியர்பயிற்சிக்கலாசாலை; மேலும் 100 ஆசிரி. அனுமதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு மேலும் நூறு ஆசிரியர்களுக்கு புதிதாக இக்கல்வி ஆண்டில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆசிரியர்களின் பெயர்களடங்கிய பட்டியல் கொழும்பிலிருந்து யாழ். கல்விப் பணிப்பாளரால் எடுத்து வரப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதிமுதல் நடைபெறவுள்ளது. இதில் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மேற்படி பயிற்சிக்கலாசாலைகளில் பயிற்சிபெற அனுமதிக்கப்படுவர்.

இதேவேளை வவுனியா மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் கடந்த மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத்தவறிய ஆசிரியர்சளுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான அனுமதியை யாழ். கல்விப் பணிப்பாளர் பெற்றுள்ளார். எனவே மேற்படி பரீட்சைக்குத் தோற்றத் தவறிய ஆசிரியர்கள் வவுனியாக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்துடன் வந்தால் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியும். இதில் தெரிவு செய்யப்படுவோர் பலாலி, கோப்பாய் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிக்காக இணைக்கப்படுவர். பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் புதிய கல்வி ஆண்டுக்கான வகுப்புகள் எதிர்வரும் இருபதாம் திகதிமுதல் ஆரம்பமாகும் என யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

புதிய கல்வி ஆண்டு 91'92 இற்காக ஏற்கனவே நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கே வகுப்புகள் நடைபெறவுள்ளதாகவும் இவர்களுக்கான கடிதங்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளினால் விரைவில் அனுப்பிவைக்கப்படும் எனவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ச)

## விசேடகூட்டம்

யாழ். முறைசாராக் கல்விப் பிரிவில் முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 3.30 இற்கு நெல்லியடி ம கல்லூரியிலும் 18 ஆம் திகதி காலை 9.00 இற்கு நல்லூர் சி. சி. பாடசாலையிலும் நடைபெற உள்ளது. (ச)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

கிளிநொச்சிக் கிளை

### தையல் பயிற்சி நெறி

1. மேற்படி பயிற்சிநெறி பயில விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி இலவசமாக நடாத்தப்படவுள்ளது. ஆர்வமுடையோர் தமது ஆற்றல், கல்வித் தகைமை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடன் 24-01-92 காலை 9-00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

2. மேற்படி பயிற்சி நடாத்துவதற்கான போதனாசிரியர் ஒருவர் தேவைப்படுவதால் அப்பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:-
- i) க,பொ. த. சா/தரம் திறமைச் சித்தி பெற்றவர்
- ii) முறைசாராக் கல்வித் திட்டத்தில் நடாத்தப்பட்ட உடுபுடைவை தயாரிக்கும் பயிற்சியின் பின் நடாத்தப்பட்ட பரீட்சையில் தேறியவர்
- iii) வயது 25 முதல் 45 வரை
- iv) வேதனம்: கலந்தாலோசித்துத் தீர்மானிக்கப்படும்

இவர்களுக்கும் நேர்முகப் பரீட்சை 24-01-92 காலை 9-00 மணிக்கு நடாத்தப்படும்.

இல. 396, கண்டி வீதி, கிளிநொச்சி.
10-01-92

கௌரவ செயலாளர்

(2100)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் தும்பன்

(மரியபிள்ளை மரியதுரை, பண்டத்தரிப்பு)

ஈழத்தாயின் மடியில் 06-10-1968

அரக்கன் பிடியில் 15-01-1989

கொள்கைதனைப் பற்றி
தமிழீழம் காப்பதற்காய்
பந்தமெல்லாம் மறந்து - நீ
உன்னையே அழித்துக்கொண்டாய்!

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

(சி/3788)

## தைப்பொங்கல் வாழ்த்து

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது இதயங்கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

அழகு நிலா - வான்மதி
தமிழ் பரிதி நகை மாடத்தினர்

இன்றிலிருந்து எமது ஸ்தாபனத்தில் கீழ்வரும் விபரத்துக்கேற்பநகைகள்விற்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 22 | கரட் | 5300 - |
| 21 | கரட் | 5000/ |
| 20 | கரட் | 4800/- |
| 18 | கரட் | 4400 - |

முக்கிய குறிப்பு:- ஓடர் நகைகள் குறித்த தவணையில்உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

(சி3724)

## தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

- பாஸ்போட் படங்கள்
- அடையாள அட்டைப்படங்கள்
- கலர்ப்பட பிரதிகள்
- கலர்ப்படச் சுருள்கள்
- போட்டோஸ்ரற் பிரதிகள்

போன்றவற்றை சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளவும் மற்றும்

உங்கள் இல்லங்களில் நிகழும் மங்களகரமான நிகழ்வுகளை புகைப்படமாக்கிடவும் நாடுங்கள் !

# இளந்தென்றல்

14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

«******* உங்கள் வரவே எங்கள் பாக்கியம்*******»

நன்றி - மீண்டும் வருக!!

(சி-3785)

# தமிழ் நாட்டில்

இந்தியா விடுதலையடைந்ததிலிருந்து இப்பொழுதுதான் முதன்முறையாகத்தமிழ் நாட்டு அரசாங்கம் அதன் மாநிலத்திலுள்ள பாடசாலைகளில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்பிப்பதைக் கட்டாயமாக்கத் தீர்மானித்துள்ளது. எம். ஜி. ஆரின் நீண்ட நாள் நண்பரும், செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருப்பவருமான திரு. ஆர். எம். வீரப்பன் தமிழ் நாட்டு மக்கள் ஆங்கில மொழிமீது கொண்டுள்ள மோகத்தையும் அவர்கள் தமிழ்மொழியைப் புறக்கணிப்பதையும் அவர் விடுத்த தீபாவளிச் செய்தியில் சாடியிருந்தார் என்பதை 5-11-91ல் வெளியான தினத்தந்திப் பத்திரிகை வெளியிட்டது.

# தமிழ் கட்டாயமொழியாகிறது

--தாரகி - ஐலன்ட் 24-11-1991

அதிக செலவை ஏற்படுத்தும் ஆங்கில மொழிக் கல்வி பல தீங்குகளை விளைவிக்கின்றது என்று பாரதியார் பாடிய பாடல் ஒன்றை மேற்கோள் காட்டி அச்செய்தியில் இவர் குறிப்பிட்டிருந்தார். இந்திய மத்திய அரசு தமிழ்க் கல்வியைப் புறக்கணிப்பதாக இவர் குற்றம் சுமத்தியுள்ளார். மத்திய அரசினால் உருவாக்கப்பட்டு, அவர்களால் நிருவகிக்கப்பட்டு வரும் பாடசாலைகள் இந்தி மொழிக்கும் ஆங்கில மொழிக்கும் முன்னுரிமை கொடுத்து, தமிழ்மொழியைப் புறக்கணிக்கப்பதன் காரணமாகத் தமிழ் நாட்டு மாணவர்கள் மத்தியில் தமிழ் மொழியைக் கற்க வேண்டிய தேவையில்லை என்ற உணர்வு தோன்றியுள்ளது. தமிழ் நாட்டில்மத்திய அரசினால் நடாத்தப்படும் எல்லாப் பாடசாலைகளிலும் கூட தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படுவதைக் கட்டாயமாக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளைத் தங்களது அரசாங்கம் எடுக்கும் என அவர் கூறியுள்ளார். அ. தி. மு. க.வைச் சேர்ந்த மூத்த அமைச்சர்களில் ஒருவரான திரு. வீரப்பன், திராவிட இயக்கம் தீவிரமாக இயங்கிய காலத்திலிருந்து அதில் இருந்து வருபவர்.

### பெருமுயற்சி

தூயதமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும்படி தமிழ் மக்களை கேட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தங்களுடைய பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும், வானொலி ஒலிபரப்புக்களிலும் ஆங்கிலச் சொற்களையும், சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்ட சொற்களையும் தவிர்ப்பதற்குப் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர். இவர்கள் ஆங்கில மொழியிலுள்ள பல இராணுவப் பதங்களுக்குச் சமானமான தூய தமிழ்ச் சொற்களை உருவாக்கியும், கண்டுபிடித்தும் இருக்கின்றார்கள். சென்ற வருடம் யூன் மாதம் போர் தொடங்கிய பின்னர், தமிழ்மொழிக்குச் சிறப்பளிக்கும் வகையில் கொண்டாடப்பட்ட முத்தமிழ்விழாவிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் முதன் முதலாகப் பொதுமக்கள் முன்னிலையில் தோன்றினார். உண்மையான திராவிடக் கோட்பாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் தாங்களே என்பதைத் தமிழ் பேசும் மக்களிடையே உணரவைக்க விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் தற்போது நடாத்தி வரும் அரசியல் பண்பாட்டு விழாக்கள் திராவிட இயக்கத்தின் தமிழ்த் தேசியவாத தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. முத்தமிழ் விழாவுக்கு முன்னுரிமை கொடுத்து அதில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கலந்து அதனைச் சிறப்பித்தமையும், தூய தமிழ் மொழியைப் பாவிப்பதற்கு அவர்கள் அக்கறை கொண்டிருப்பதும் இந்த உண்மையை வெளிப்படுத்துகிறது.

அதிகமான மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் இராணுவ அமைப்பாகக் கருதுகிறார்களேயன்றி, அவர்களது மற்றைய சிறப்பியல்புகளை அறியும் ஆற்றல் இல்லாதிருக்கின்றார்கள். தமிழர்களது மொழியையும், அவர்களது பண்பாட்டையும் பரப்புபவர்களும், காப்பாற்றுபவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளே என்று இலங்கைத் தமிழ் மக்களையும், இந்திய மக்களையும் உணர வைக்க அவர்கள் விரும்புகின்றனர். தமிழ் நாட்டில் நிலவும் குழப்ப நிலையை நோக்குமிடத்து விடுதலைப் புலிகளின் இந்த முயற்சி செயல் வடிவம்பெறும் என்றே நினைக்கத் தோன்றுகிறது. கன்னடத்து ஐயங்கார் பிராமண வகுப்பைச் சேர்ந்தவரான செல்வி ஜெயலலிதா பிரமணியத்தை வளர்க்க முயற்சிக்கின்றார் என்று திராவிட முன்னேற்றக் கழகம் அவர் மேல் குற்றம் சுமத்துகின்றது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து சென்னை மாகாண அரசியலிலும் பின்னர் தமிழ் நாடு அரசியலிலும் பிராமணர், பிராமணர் அல்லாதார் என்ற முரண்பாடு பெருமளவு நிலவி வந்தது. இதுவே திராவிட இயக்கம் தோன்றக் கருவாக அமைந்ததும், அதன் மையமாக இப்பொழுது இருப்பதும் ஆகும். தமிழ் நாட்டில் பெரும்பாலோராயுள்ள தமிழர்களின் மொழியாகத் தமிழையும், அவர்களது பண்பாட்டையும் பிராமணர்கள் அடக்கி ஒடுக்கி வருவதாகவும், அதன் மதிப்பைக் குறைத்து வருவதாகவும் திராவிட இயக்கம் அவர்கள் மீது குற்றம் சுமத்தியது.

திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா தி. மு. கழகமும் எழுச்சி பெற்ற பின்னர் தமிழ் நாட்டிலுள்ள பிராமணர்கள் அங்கு பலதுறைகளில் தாங்கள் செலுத்தி வந்த தங்களது வழமையான மேலாதிக்கத்தையும் செல்வாக்கையும் இழந்தனர். இந்தியா விடுதலையடைவதற்கு முன்னர் காங்கிரஸில் பிராமணர்களுக்கு இருந்த செல்வாக்கு திரு. காமராஜர் அக்கட்சியின் தலைவராகிய பின்குறைந்து தமிழர்களுடைய செல்வாக்கு அதிகரித்தது. (சமஸ்கிருத மொழியில் புலமை பெற்ற பிராமணர்கள் இந்தி மொழியில் இலகுவாக தகைமை பெறத்தக்கதாயிருந்தபடியாலேயே, இந்த மொழியை 1960 களில் கட்டாய பாடமாக்கியதற்கு பிராமணர் அல்லாத தமிழர்கள் தங்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.)

### கல்வி

தமிழ் நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த திராவிடக் கட்சிகள் கடைப்பிடித்து வந்த சாதிமுறையினடிப்படையிலான உயர்கல்வி முறையாலும் வேலை வாய்ப்பு வழங்குவதிலும் அவர்கள் கடைப்பிடித்த பங்கீட்டு முறையினாலும்நன்கு படித்த ஆங்கில அறிவுள்ள மத்திய வகுப்பைச்சேர்ந்த பிராமணர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள். இருப்பினும் தமிழ் நாட்டில் பல முக்கியமான சஞ்சிகைகளும், புதினப் பத்திரிகைகளும் பிராமணர்களாலேயே வெளியிடப்படுகின்றன. தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கம் வழங்கும் பதவிகளும், வெளிநாடுகளில்அதனால் வழங்கப்படும் பதவிகளும், புலனாய்வுத்துறைக்கான பதவிகளும் தமிழர்களுக்குக் கொடுக்கப்படாது தமிழ்பேசும் பிராமணர்களுக்கே கொடுக்கப்பட்டது. குறைந்த எண்ணிக்கையான பிராமணர்கள் தங்கள் எண்ணிக்கைக்குக் கொடுக்க வேண்டிய விகிதாசாரத்திலும் பார்க்க மிகக் கூடியளவு அதிகாரத்தையும், செல்வாக்கையும் முன்னர் செலுத்தி வந்தது போல், தற்பொழுது அவர்கள் செல்வாக்கு இல்லை.

(2-ஆம் பக்கம் பார்க்க)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மேஜர் கௌரி
(செல்வன் சதானந்தன் அனுதீபன்)

தமிழ்த்தாய் மகிழ்ந்திட 05-01-1968
தமிழ்த்தாயகம் மலர்ந்திட 26-01-1991

திதி: வளர்பிறை ஏகாதசி, 15-01-1992

பொன்னான தமிழீழம் பொலிவுற்று திகழ்ந்திடவே
மன்னாரில் நீ செய்த மாண்பு மிகு சாதனைகள்
நின் நாமம் நிலைத்திருக்க நின்றிடுமே நிலைகளாய்
உன்னாவி தனையே தமிழுக்காய் ஈந்திட்டாய்
உமக்கு எங்கள் அஞ்சலிகள்

பெற்றோர், சகோதரர்கள், உறவினர்
பாலை பெருமாள் கட்டு, மன்னார். (2080)






அமைதி பொங்கிட
அன்பும் பொங்கிட
என்றும் மங்களம்
எங்கும் தங்கிட
வாழ்த்துகின்றோம்.

தினமும் "நீம்" தூபம் பாவித்துச் சுகாதார வாழ்வை உறுதி செய்வோம்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(சி'3793)



## அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி நடாத்தும் ஓவியப் போட்டி

இவ்வருடம் 08-03-1992 இல் நிகழவிருக்கும் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஓவியக் கலைஞர்களையும், ஓவியக் கலையில் ஆர்வமுள்ள ஏனைய தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கேட்டுக் கொள்கிறது.

### போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்:-

கீழ்க்காணும் இரு முக்கிய விடயங்களை மனதில் கொண்டு அவ்விடயங்களில் ஏதாவது அம்சம் உள்ளடங்கியதாக உங்கள் ஓவியங்களைப் படைக்கவும்.

★ ஓவியங்கள்பெண்கள் எதிர்நோக்குகின்றசமூகப்பிரச்சினைகளை மையமாக வைத்துபெண்கள் மீதுசமூகத்தின் அடக்கு முறைகள், அழுத்தங்கள் இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைய வேண்டும். அதாவது இந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

★ சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்கள் யதார்த்த நிலையை பிரதிபலிப்பதாக - எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக்கொண்டு வருவதாக, எழுச்சியூட்டுவதாக அமைய வேண்டும்.

### ஏனைய விதிகள்:

1) ஓவியங்கள் 28'' X 22'' (பிரிஸ்ரல் போட் அளவு) அளவுடையதாக இருக்க வேண்டும்.

2) வர்ண சாதனங்களாக பின்வரும் எந்த ஊடகங்களையும் பயன்படுத்தலாம்.

நீர் வர்ணம், மெழுகுச் சோக் வர்ணம்
போஸ்ரர் வர்ணம், கலப்புச்சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்

3) போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களே போட்டிக்காக அனுப்ப முடியும்.

4) ஓவியத்தினுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம் பெறக்கூடாது. பெயர், முகவரி, பாடசாலை விபரம், உறுதிப்படுத்தல் போன்றவற்றை ஓவியத்தாளின் பின்புறத்தில் இடவும்.

5) போட்டிக்கான ஓவியங்கள் யாவும் 05-02-1992 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கும் பிந்தியதாக வந்து சேரும் ஓவியங்கள் போட்டிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

6) உங்கள் ஆக்கங்களை உங்களுங்கள் பகுதியிலுள்ள வி பு. மக்கள் முன்னணி, வி. பு. மகளிர் முன்னணி பிரதேச, பிரிவு காரியாலயங்களில் சேர்ப்பிக்கவும்.

7) தகுதி வாய்ந்த நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்

### மாணவர்களுக்கான சிறப்பு விதிகள்:-

மேற்குறிப்பிட்ட விதிகளுக்கமைவதோடு ஒவ்வொரு மாணவரும் போட்டிக்காக அனுப்பப்படுகின்ற ஓவியம் தனது சொந்தப்படைப்புத்தான் என்பதை அதிபர்கள். வகுப்பாசிரியர்களின் ஒப்பம் இடுவித்து உறுதிப்படுத்த வேண்டும். (இவ்வாறு உறுதிப்படுத்துவதை ஓவியத் தாளின் பின்பக்கத்தில் செய்யவும்)

மாணவர்களுக்கான போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு எனத்தனித்தனி பிரிவுகளாக நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

வி. பு. மகளிர் முன்னணி

(சி/3577)

## சிந்தனைக்கு

நீ எசமானன் போல் வேலை செய்யவேண்டும்;
அடிமையைப் போலல்ல. ஓயாமல் உழை;
ஆனால் அடிமையாய் உழைக்காதே

— சுவாமி விவேகானந்தர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 15-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# உழைப்பதற்கு நிலம் வேண்டும்

இன்று தைப்பொங்கல். இது தமிழர்களின் திருநாள். உழைப்பாளர்களின் பெருநாள். உழைப்பாளர்கள் தமது அறுவடையைக் கொண்டு மகிழ்ந்திருக்கும் நன்னாள். அத்தோடு 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற எதிர்கால நம்பிக்கையுடன் தமது வாழ்க்கைப் பயணத்தை தொடரும் நம்பிக்கை நாளுமாகும்.

ஆனால் இன்று இந் நன்னாளையே சிங்களப் பேரின வாதம் கேள்விக்குரியதாக்கியுள்ளது. சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பால் எமது நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. வயல் வெளிகளில் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் குடியேறியுள்ளனர் அல்லது இராணுவ ஆக்கிரமிப்பால் விளை நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியுள்ளன. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையை உழைப்பாளர்கள் பெறுவதற்கு அவர்களுக்கு உழைக்க நிலமில்லை. அகதி முகாம்களில் எதிர்காலத்தில் நம்பிக்கையின்றி உழைப்பாளிகள் கண்ணீர் விடுகின்றனர்.

தமது மண்ணில் தமிழருக்குப் பாதுகாப்பின்மையே இதற்கான காரணம். ஆனால் இந்நிலை தொடர்வதை தமிழர்கள் அனுமதிக்கப்போவதில்லை என்பதை தமிழீழப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சி காட்டுகிறது. தமிழீழத்தின் அறுவடைக்காக இலங்கைத் தமிழர்களின் முதலீடோ அளவிட முடியாதது. விலை மதிப்பற்ற பல ஆயிரம் உயிர்களைக் கொடுத்திருக்கின்றோம். பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளோம். இப் பெரும் அர்ப்பணிப்பின் மத்தியிலும் எமது அறுவடை இன்னமும் எமது கைக்கு எட்டவில்லை. அதாவது இலங்கைத் தமிழர் தமது சுதந்திரத்திற்காகப் பல வருடங்கள் உழைத்தபோதும் இன்னும் சுதந்திரமானதுமான, பாதுகாப்பானதுமான வாழ்க்கைக்குவழி பிறக்கவில்லை.

ஆனால் எமது உழைப்பின் பலன் கைக்கு வந்தடையும் என்ற நம்பிக்கை தமிழருக்கு உள்ளது. இதே வேளை இந்த அறுவடை இன்னும் கிடைக்காமைக்கு காரணம் நாம் உழைத்தது அறுவடைக்குப் போதாது என்பதனாலேயேயாகும்.

இந் நிலையில் எமது உழைப்பின் பலனை நாம் விரைவிலேயே பெற்றுக்கொள்வதானால் தீவிரமாக உழைக்க வேண்டும். நீண்ட நாள் உழைத்துவிட்டோம். இனி உழைக்க முடியாது என ஓய்வெடுக்கும் கால கட்டமல்ல இது.

இக் கடின உழைப்பில் நாம் வெற்றி பெற்றே ஆக வேண்டும். அப்பொழுதுதான் தமிழர் வாழ்வில் 'தை பிறந்தால் வழி பிறக்க' வாய்ப்பு ஏற்படும்; உழவர்கள் உழுவதற்கு நிலம் இருக்கும் திருநாளைக் கொண்டாடப் பொருளிருக்கும். இதை உணர்ந்து மண்ணுக்கான போராட்டத்தை விரைவுபடுத்துவோம்; வெல்வோம்.

# மாவீரர் கலை அரங்கில் கலை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தினரால் மானிப்பாய் மாவீரர் கலை அரங்கில் கலை நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சி தைப் பொங்கல் தினமான இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

வி.பு.க. பண்பாட்டுக்கழகம் வழங்கும் பொன்.கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகமும், சாந்தன் இசைக்குழுவினரின் ''போர்க்கால ராகங்கள்'' இசை நிகழ்ச்சி என்பன நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளாகும்.

இந்நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்கான ரூபா 10 பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்களை மாவீரர் கலை அரங்கு நுழைவாயிலில் இன்று பிற்பகல் 5 மணியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

## புனர்வாழ்வுக்கு

குவதில் தமக்குத் தடையெதுவுமில்லை என்றும் உதவி வழங்கும் நாடுகளின் தரப்பில் சொல்லப்பட்டது.

1980- இல் உதவி வழங்கும் நாடுகள் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கென 200 மில்லியன் டொலர் வழங்கின. இந்தப்பணத்தின் பெரும் பகுதி உபயோகப்படுத்தப் படாமல் இருந்ததால் உதவும் நாடுகள் உதவியை மீளப் பெற்று வேறுதேவைகளுக்குப் பயன்படுத்தின.

# லலித்திற்கு எதிராக தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

வழக்கறிஞர் தொழில் புரியவர் பட்டியலிலிருந்து லலித் அத்துலத்முதலியின் பெயரை நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவையை ஏமாற்றினார் என்ற குற்றத்தின் அடிப்படையிலேயே வழக்கறிஞர் பட்டியலில் இருந்து அவரது பெயரை அடித்துவிட அரசு முயற்சிக்கிறது.

ஜனாதிபதியின் மீதான குற்றச்சாட்டு மனுவுக்குக் கையெழுத்து வைத்தபின்னர் தனது சகபாடிகளான அமைச்சர்களுடன் சேர்ந்து அமைச்சரவைக் கூட்டத்தில்ஜனாதிபதிமீதான நம்பிக்கைப் பிரேரணையில் அவருக்கு ஆதரவாக லலித் வாக்களித்துள்ளார். இந்த வாக்கெடுப்பு கடந்த வருடம் ஆகஸ்ட் 28 இல் இடம்பெற்றது.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்றம் டிசம்பர் 4ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் இதை ஊர்ஜிதம் செய்துள்ளது.

ஏமாற்றுதல், தகாதநடத்தை அல்லது குற்றம்புரிதல் ஆகிய குற்றச்சாட்டுகள்தொடர்பாக வழக்கறிஞர் ஒருவர் மூன்று நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டால், நீதிபரிபாலனச் சட்டத்தின்பிரகாரம் அவரை வழக்கறிஞர் பட்டியலில் இருந்து நீக்கிவிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்நீதிமன்றஒழுங்குமுறைகளின்படி எவராவது ஒருவர் மேற்படி குற்றங்களில் ஒன்றைச் சுமத்தி ஓர் வழக்கறிஞர் மேல் வழக்குத்தாக்கல்செய்யலாம். முதலில்நீதிமன்றம்வழக்கைப் பூர்வாங்க விசாரணைகளுக்காக வழக்கறிஞர் சங்கத்திடம் பாரப்படுத்தும். இது கட்டாயமல்ல.

வழமையாக உயர் நீதிமன்றம் குற்றப்பத்திரிகையைவழக்கறிஞருக்கு எதிராகத் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபரைப்பணிக்கும். இதேவேளை குற்றப்பத்திரிகை, குற்றம் சுமத்தப்பட்ட வழக்கறிஞரிடம் கையளிக்கப்பட்டு, அவர் பெயரை ஏன் வழக்கறிஞர் பட்டியலில் இருந்து நீக்கக் கூடாது என்று அவரிடம் நீதிமன்றம் காரணம் கேட்கும்.

மாபொல நிதிய இயக்குநர் சபையிலிருந்தும் லலித் அத்துலத் முதலியை விலக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாகச்சொல்லப்படுகிறது.

## மீனவரை

யாகசர்வ தேசசெஞ்சிலுவைச் சங்கத்தை வந்தடைந்தது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உயரதிகாரியிடம் இவர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். மகஜரைக் கையேற்ற அதிகாரி இதுபற்றிதான் ஏற்கனவே உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் இவர்களை விடுவிக்க சகல முயற்சிகளையும் தான் மேற்கொள்வதாகவும் உறுதி அளித்தார்.

அதனைத்தொடர்ந்து அவ்வூர்வலம் யாழ். செயலகத்தை சென்றடைந்தது.அங்கேயாழ். அரசாங்க அதிபரைக் கண்டதும் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். இக்காட்சி அங்கே குழுமி நின்ற அனைவரது நெஞ்சங்களையும் நெகிழ வைத்தது. இவர்களிடமிருந்து மகஜரைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர் அவற்றை உடனடியாக கொழும்பிற்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

குருநகர், நாவாந்துறை, பாஷையூர் பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் ஆறு கையெழுத்திட்டுள்ள மேற்படி மகஜரில் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குருநகர், பாஷையூர் மீனவர்கள் 18 பேர்களது பெயர்களும், முகவரிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் 'எமது கடலில் எம்மைத் தடுக்க எவனுக்கு உரிமையுண்டு' தடுப்பது தொடர்ந்தால் மக்கள் வெடிப்பது உறுதி போன்ற வாசகங்கள் அடங்கிய பல சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்றனர். (ச,43,21)

இவ்வாண்டு மானியமாகவும், கடனாகவும் 860 மில்லியன் டொலரை உதவிவழங்கும் நாடுகளிலிருந்து கோர சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளதாக நிதி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# மன்னார் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் கடமையாற்றிய ஒரு பகுதி ஆசிரியர்களின் ஊக்குவிப்புப் கொடுப்பனவு லீவு விபரம் யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார்க் கல்வித் திணைக்களக் கணக்காளர் வை. குகதாஸ் அவர்களால் உறுதி செய்யப்பட்ட லீவு விவரங்களை உரிய ஆசிரியர்கள் யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள் ஏனைய லீவு விபரங்கள் மிகக் குறுகிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகச் சிறையில்

கைது செய்யப்பட்டிருந்தனர்

பாஸ்கரன், நந்தகோபால், ராதா, ரவிச்சந்திரன், முகுந்தன், வினோத், கிருஷ்ண பிள்ளை, சிறிதரன், மரியநாயகம் மற்றும் ஒருவரும் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## குடியிருப்பு

மேற்படி பகுதிகளில் கடந்த சில நாட்களாக சிறிலங்கா இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றால் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், பீரங்கித் தாக்குதல்கள் ஆகியவற்றால் பலஅப்பாவிப் பொது மக்களுக்கும்அவர்களது உடைமைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

எனவே மனிதாபிமான முறையில் இவற்றைத் தடுத்து நிறுத்தக் கோரி சிறிலங்கா ஜனாதிபதிக்கும் சர்வதேச உலகுக்கும் எழுதப்பட்ட மேற்படி மகஜர்கள்யாழ். அரசாங்க அதிபரிடமும் சர்வதேச செஞ்சிலுவை சங்கபிரதிநிதியிடமும் கையளிக்கப்பட்டது.

இவர்கள் மேற்படி மகஜர்களை உரிய இடத்திற்கு உடனடியாக அனுப்பிவைப்பதாக உறுதி அளித்தனர்

மேற்படி மகஜரில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் கையொப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## புலிகள்

களை இழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் தாண்டிக்குளம், ேயாடிக்கூளாங்குளம் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரே கால்களை இழந்தவர்கள் ஆவர்.

# இரு தமிழர் இராணுவத்தால் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு).

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோவில் போரதீவு என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். நேற்று மேற்படி ப்குதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வீதியால் சென்று கொண்டிருந்த இரு அப்பாவிப் பொது மக்களையும் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

## புலிகளின்

லைப் புலிகள் கடற்பரப்பில் சிறிலங்கா ரோந்துப் படகுகளைவழிமடக்கித்தாக்கியமையும் பல கடற்படையினரைக் கொன்றமையும் புலிகள் கடற்பரப்பிலும் நேருக்கு நேர் மோதத்தயாராயிருக்கின்றனர் என்ற நிலையை உருவாக்கியது.

இறுதியாக காரைநகர் பென்னாலைப் பாலத்தில் அமைந்திருந்த சிறிலங்கா கடற்படைக் காவலரண்மீது கடந்த வெள்ளியன்று அதிகாலையில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பத்துக் கடற்படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வரிசையாகப் பல பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கடற்படை திட்டமிட்டுள்ளது.

புலிகளினது இத்தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த கடற்படைத் தளபதி றியல்அட்மிறல் கிளான்சிபெர்னான்டோ வடபகுதி கடற்படைப் பிரிவு அமைந்திருக்கும் காரைநகர் தளத்துக்கு அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பியுள்ளார்.

காரைநகருக்கு விஜயம் செய்த கடற்படை அதிகாரிகளைக் கொண்ட இந்தக்குழு காரைநகர்க் கடலோரங்களில் சிறிலங்கா கடற்படை அமைந்துள்ள பாதுகாப்பு அரண்களையும் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பரிசீலித்தது.

குழுவின் அறிக்கை கிடைத்த பின்னரே புலிகளின் தாக்குதலில் இருந்து தற்பாது காத்துக்கொள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது-

## வீரச்சாவு

வீரவேங்கைகள் பரந்தாமன் (சின்னையா புஸ்பராசா - கருகட்டமுறிப்பு, மாங்குளம்), சுகுணன் (திருநாவுக்கரசு சதீஸ் - ஓட்டுசுட்டான், கற்சிலைமடு) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## திருமலை

நேற்று முன்தினம் மூதூர் பத்திரகாளிஅம்மன் கோயிலில் இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மலையகத்தில்

னர்.

சந்தேகத்துக்கு இடமானவர்களின் இருப்பிடங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பகுதியை அடுத்துள்ள நமுனுகல ஹிந்தல காட்டுப் பகுதியும் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் தேடுதல் வேட்டைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இக் கொள்ளை பற்றி தெரிவித்த எல்ல பொலிசார் இது புலிகளின் கைவரிசையே என திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இக் கொள்ளைநடைபெற்ற போது பொலிசாரை சுமார் நூறு இளைஞர்கள் தாக்கினார்கள் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டங்களில்

# பட்டினி நிலையில் மக்கள்; உதவ அரச அதிபர்கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு போதிய உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கும் முயற்சியில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் ஈடுபடவேண்டுமெனஅங்குள்ள அரச அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவுப் பகுதியில் பெரும் உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நிலைமை ஒரு மாதத்திற்கு நீடிக்குமானால் அங்குள்ள மக்கள் பட்டினியை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் அவ்மாவட்ட அரசாங்க அதிபர் தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மாதத்தில் ஒருதடவை வீதி வழியாக உணவுப் பொருள்களை எடுத்துச் செல்கிறது. இந்த சுழற்சிமுறையில் மாதத்தில் ஒரு தடவை மட்டுமே முல்லைத்தீவுக்கு உணவு கிடைக்கிறது. ஆகவே இந்த உணவு போதாமல் உள்ளதுடன் உள்ளூர் உணவுப் பொருள்களும் கிடையாதுள்ளது. எனவே இந்த மக்களை பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்ற சர்வதேச நிறுவனங்கள் உதவ வேண்டுமென அரச அதிபர் கோரியுள்ளார்.

இது இவ்விதமிருக்க முல்லை மாவட்டத்தில் ஒரேயொரு டாக்டரே கடமையாற்றுகிறார். அவரும் ஓய்வு பெற்று சேவை நீடிப்புப் பெற்றவர்.

இதனால் முல்லை மக்கள் உணவின்றியும், வைத்திய வசதிகளின்றியும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

## மனைப்பொருளியல் 25 இல் செய்முறைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மனைப்பொருளியல் செய்முறைப் பரீட்சை முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் கொழும்பு சென்ற யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதி. முதல் மேற்படி செய்முறைப் பரீட்சையை இங்கு நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரம்1990ஆம் ஆண்டு விசேட பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கே இச் செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதிவரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்புவதில் யாழ். கல்வித்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்ட பரீட்சார்த்திகளின் வசதி கருதி அவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சையின் பூர்வாங்க செயல்பாடு பற்றியும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் விளக்கமளிப்பதற்கான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் இருபத்திரெண்டாம் திகதி காலை பத்து மணிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்திற்கு பரீட்சைக் குழுவைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியத்தினால் நடாத்த ஒழுங்குசெய்யப்பட்ட, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டங்களுக்கான அன்னைபூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு ஆசிரியருக்கான கலந்துரையாடல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

காணாமற் போன மாணவர்

## விசாரணைக்குஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

காணாமற்போன பாடசாலை மாணவர்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு சிறிலங்கா வழக்கறிஞர் சங்கம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கேட்டுள்ளது. காணாமற்போன மாணவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர் வழக்கறிஞர் சங்கத்திடம் செய்துகொண்டமுறைப்பாடுகளைத்தொடர்ந்தே இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 1989 க்கும், ஜனவரி 1990 க்குமிடையில் எம்பிலிப்பிட்டியாவில் 31 மாணவர்களைக் காணவில்லை என்றும், இவர்கள் 17க்கும், 20 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும், பெற்றோர் மேற்படி சங்கத்திடம் தெரிவித்துள்ளார்கள். தமது பிள்ளைகளைக் கடத்திச்சென்ற சிலரை தம்மால் அடையாளம் காட்ட முடியும் என்று பெற்றோர் தரப்பில் சொல்லப்படுகிறது காணாமற்போன தமது பிள்ளைகள் தொடர்பாக அரச அதிகாரிகள் பயன்பொருத்தமான எந்த நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எம்பிலிப்பிட்டிய மத்தியகல்லூரி, மகா வித்தியாலயம், ஹல்மிலகட்டிய வித்தியாலயம் மோடறவள வித்தியாலயம், துன்கமவித்தியாலயம், மோடறகட்டிய மகாவித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளில் இருந்து 31 மாணவர்களும் கடத்தப்பட்டுக் காணாமற் போயுள்ளார்கள்.

காணாமற்போன மாணவர்கள் தொடர்பாக விசாரணை நடாத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் அபயசூரியா ஜனவரி 7 ஆம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

## 5,000 பதவி வெற்றிடங்கள்; நிரப்ப சுகா.அமைச்சு முடிவு

(கொழும்பு)

சுகாதார அமைச்சு இந்த ஆண்டு முடிவடைவதற்குள் 5000 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஆயிரத்து நூற்றி இருபது பெண்கள் சுகாதாரத் தொண்டர்களாக நியமிக்கப்படுவர். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருந்தாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், பாடசாலைப் பற்சிகிச்சை வைத்தியர்கள், தாதிமார் ஆகியோருக்கான வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

ஏற்கனவே தமது பயிற்சியை முடித்துக்கொண்ட வைத்திய நிபுணர்களுக்கு மேலும் வெளிநாட்டில் பயிற்சியளிப்பதற்கு ஒரு கோடி ஐம்பது இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார, மருத்துவ வசதிகளை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும்நோக்கத்தோடு சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கைகளை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


மங்களகரமான தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

- புடைவை வகைகள்
- சிறுவர், சிறுமிகள் விளையாட்டுப் பொருள்கள்
- கண்ணாடிப் பாத்திரங்கள்
- அழகு சாதனப் பொருள்கள்
- மின்சாரப் பொருள்கள்
- பிளாஸ்டிக் வகைகள்
- பல் பொருள்கள் (பால்மாவகைகள், பலசரக்குச் சாமான்கள்)
- மின்சாரப் பொருள்கள்

❋ மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கென விசேடமாக வரவழைக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் யாவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



❋ குறிப்பு: 1) பாடசாலை அதிபரின் ஊடாக மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அப்பியாசப் புத்தகங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
2) மத்திய கிழக்கு தவிர்ந்த ஏனைய மேலை நாட்டு நாணயங்கள் நியாயமான விலையில் மாற்றிக் கொடுக்கப்படும்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே குடையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

ஏரிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3791)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.